General permission to publish and disclose information

# தகவலை வெளியிடுவதற்கும் வெளிப்படுத்துவதற்குமான பொதுவான அனுமதி

அன்புள்ள பெற்றோர்/பராமரிப்பாளர்

உங்கள் பிள்ளையின் அனுபவங்களை மற்ற மாணவர்களுடன் பகிர்ந்துகொள்வதற்கும், பள்ளிக்கூடம் மற்றும் மாணவர்களின் செயல்பாடுகளை மற்றைய பள்ளிக்கூடம் மற்றும் பரந்த சமூகத்திற்குத் தெரிவிக்கும் நோக்கங்களுக்காகவும் மற்றும் குறிப்பிடத்தக்க திட்டங்கள் அல்லது சமூக சேவையில் மாணவர் பங்கேற்பைப் பதிவுசெய்வதற்கும், பள்ளி/கல்வித் துறை உங்கள் பிள்ளையைப் பற்றிய தகவலை வெளியிட மற்றும்/அல்லது வெளிப்படுத்த உங்கள் அனுமதியை நான் கோருகிறேன்.

உங்கள் குழந்தையின் பெயர், வயது, வகுப்பு மற்றும் பள்ளிக்கூடத்தில் சேகரிக்கப்பட்ட புகைப்படங்கள், உங்கள் குழந்தையின் ஒலி மற்றும் காட்சிப் பதிவுகள், தொடர்பாடும் ஊடகம் போன்றவற்றில் உங்கள் குழந்தை வெளிப்படுத்திய ஆற்றல் மற்றும் கருத்துக்கள் இந்த தகவலில் உள்ளடக்கப்படலாம்.

உங்கள் குழந்தை பற்றிய தகவல் வெளியிடப்படும் அல்லது வெளிப்படுத்தப்படும் தகவல்தொடர்புகளில் பின்வருவன அடங்கும், ஆனால் அவை மட்டும் என்று வரையறுக்கப்படவில்லை:

- பள்ளிக்கூட இணையதளம், கல்வித் துறையில் பணிபுரியும் ஊழியர்களுடன் மற்றும் தகவல்களை பரிமாறிக்கொள்ளும் கல்வித் துறையின் அக இணையம் (ஊழியர்கள் மட்டும்), வலைப்பதிவுகள் மற்றும் விக்கிப்பீடியாக்கள் உட்பட கல்வித் துறையின் பொது இணையதளங்கள்
- பள்ளிச் செய்திமடல், ஆண்டுப் பள்ளி இதழ் மற்றும் பள்ளி அறிக்கை, அச்சு மற்றும் துறையின் இணையதளங்கள் உட்பட மின்னணு முறையில் வெளியிடப்பட்ட விளம்பரப் பொருட்கள் உள்ளிட்ட கல்வித் துறை வெளியீடுகள்
- YouTube, Facebook மற்றும் Twitter போன்ற சமூக ஊடகங்களில் உள்ள அதிகாரப்பூர்வ துறை மற்றும் பள்ளிக்கூட சமூக ஊடக கணக்குகள்
- உள்ளூர் மற்றும் பெருநகர செய்தித்தாள்கள், சஞ்சிகைகள் மற்றும் பத்திரிகைகள் மற்றும் பிற ஊடகங்கள்.

பொது இணையதளங்கள் மற்றும் சமூக ஊடகத்தளங்களில் தகவல் வெளியிடப்படும் போது, அது நிரந்தரமாக இல்லாவிட்டாலும், பல ஆண்டுகளாக இணையத்தில் கண்டறிய முடியும் என்பதை பெற்றோர்கள் அறிந்திருக்க வேண்டும். தேடுபொறிகள் வெளியிடப்பட்ட தகவலின் நகல்களைத் தேக்கி வைக்கலாம் அல்லது தக்கவைத்துக் கொள்ளலாம். வெளியிடப்பட்ட தகவல் மூன்றாம் தரப்பினரால் இணைக்கப்படலாம்.

அனுமதிப் படிவத்தைப் பூர்த்தி செய்து, பின்வரும் தேதிக்குள் பள்ளிக்கூடத்தில் கையளிக்கவும்:

Date for return of permission form

**உரைப்பெயர்ப்பாளர் ஆதரவுதவி**

மேலும் விவரங்கள் வேண்டுமானால் பள்ளிக்கூடத்தை தொடர்பு கொள்ளவும்.

பள்ளிக்கூடத்தை தொடர்புகொள்ள உங்களுக்கு உரைப்பெயர்ப்பாளர் ஆதரவுதவி தேவைப்பட்டால், தயவுசெய்து 131 450 என்ற எண்ணிற்கு அழைக்கவும், உங்களுக்கு என்ன மொழி தேவை என்பதை தொலைபேசி இயக்குனரிடம் சொல்லி, பள்ளிக்கூடத்தை அழைக்க சொல்லவும். உங்கள் உரையாடலில் உங்களுக்கு உதவ, தொலைபேசி இயக்குனர் ஒரு உரைப்பெயர்ப்பாளரை அழைப்பில் இணைப்பார். இந்த சேவைக்காக உங்களிடம் கட்டணம் வசூலிக்கப்படாது.

உங்களின் உண்மையுள்ள

அதிபரின் பெயர் (Name of principal)

பள்ளிக்கூடத்தின் பெயர் (Name of school)

## வெளியிடுவதற்கான பெற்றோர்/பராமரிப்பாளர் அனுமதி ஒப்புதல்

## Parent/carer permission to publish consent

வெளியிடுவதற்கான இந்த அனுமதியைப் வாசித்தேன் மற்றும்:

(கீழே உள்ள ஒரு பெட்டியை மட்டும் குறியிடவும் மற்றொன்றை காலியாக விடவும்)

☐ பொதுவெளியில் அணுகக்கூடிய தகவல்தொடர்புகள் உட்பட, மேலே விவரிக்கப்பட்டுள்ளபடி எனது குழந்தையைப் பற்றிய தகவலை வெளியிட பள்ளி/கல்வித்துறைக்கு நான் அனுமதி வழங்குகிறேன்.

I give permission to the school/Department of Education to publish information about my child as described above, including in publicly accessible communications.

☐ பொதுவெளியில் அணுகக்கூடிய தகவல்தொடர்புகள் உட்பட, மேலே விவரிக்கப்பட்டுள்ளபடி எனது குழந்தையைப் பற்றிய தகவலை வெளியிட பள்ளி/கல்வித்துறைக்கு நான் அனுமதி வழங்கவில்லை.

I do not give permission to the school/Department of Education to publish information about my child as described above, including in publicly accessible communications.

இந்த கையொப்பமிடப்பட்ட அனுமதி பள்ளிக்கூடத்திற்கு நான் அறிவுறுத்தும் வரை நடைமுறையில் இருக்கும்.

குழந்தையின் பெயர்
(தயவுசெய்து தனி எழுதுக்களில் எழுதவும்) ______________________________

Name of child

பெற்றோர்/பராமரிப்பாளரின் பெயர்
(தயவுசெய்து தனி எழுதுக்களில் எழுதவும்) ______________________________

Name of parent/carer

பெற்றோர்/பராமரிப்பாளரின் கையொப்பம் ______________________________

Signature of parent/carer

தேதி ____________________

Date